கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சிதம்பரம்

**அசல் வழக்கு எண்.218/2014**

The Oaths Act 1969(Act.44/1969)-ன் விதிமுறைகளின் படி 11.03.2025 நாளாகிய இன்று கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி(FAC), திருமதி.S.Suganiya Sri, B.A.B.L.,(Hons),M.L.,PGDAML. அவர்களால் சாட்சியிடம் சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு சாட்சி விசாரணை செய்யப்பட்டார்.

| | | | |
|---|---|---|---|
| தேதி | 11.03.2025 | சாட்சி | பி.வா.சா.1 |
| பெயர் | பகீரவதி | வயது.. | 49 |
| கணவர் பெயர்.. | கணேசன் (எ) கணேசமூர்த்தி | கிராமம்.. | மீதிகுடி |

**சாட்சி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி..**

3. என்னுடைய மாமனார் பெயர் ரத்தினசபாபதி என்றால் சரிதான். எனது மாமியார் பெயர் சற்குணம் (எ) சரஸ்வதி. ரத்தினசபாபதியின் தனப்பனார் பெயர் குமாரசாமி. குமாரசாமியின் மனைவி பெயர் என்னவென்றால் தையல்நாயகி என்று நினைக்கிறேன். குமாரசாமியின் தகப்பனார் பெயர் சுப்பிரமணி, தாயார் பெயர் அபிராமிஅம்மாள். சுப்பிரமணியன் அபிராமிக்கு ஒரே மகன் மட்டும் தான். என்னுடைய கணவர் பெயர் கணேசன் என்றாலும், பத்திரத்தில் கணேசமூர்த்தி என உள்ளது என்றாலும் சரிதான். ரத்தினசபாபதியின் மகள் தையல்நாயகியை இளங்கோவன் என்பவருக்கு திருமணம் செய்து கொடுத்தார்கள், அவர் இளநாங்கூர் கிராமத்தை சேர்ந்தவர். இளங்கோவன் தையல்நாயகி எவ்வளவு நாட்களாக இளநாங்கூரில் வசித்து வந்தார்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. தையல்நாயகிக்கு எப்போது திருமணம் ஆனது என்பது எனக்கு தெரியாது என்றால் சரிதான்.

4. தையல்நாயகி எந்த வருடம் மீதிகுடி கிராமத்திற்கு வந்தார்கள் என்றால் எனக்கு தெரியாது. தையல்நாயகியின் மகன்கள் விநாயகமூர்த்தி, சிலம்பரசன் என்றால் சரிதான். விநாயகமூர்த்தி, சிலம்பரசன் ஆகியோருக்கு ரத்தினசபாபதி சொத்து ஏதேனும் கொடுத்துள்ளாரா என்றால் அவர்கள் வசித்து வரும் இடத்தை கொடுத்துள்ளார். எப்போது அந்த சொத்து கொடுக்கப்பட்டது என்றால் என்னுடைய திருமணத்திற்கு பிறகு கொடுத்தார்கள் ஆனால் வருடம் தெரியாது. நான்

குடியிருப்பது பூர்வீக சொத்து என்றால் இல்லை அபிராமிஅம்மாள் சொத்தை ரத்தினசபாபதி முத்துகுமரனுக்கு பாட்டி சொத்து என எழுதிவைத்தார். முத்துகுமரனுக்கு சக்திமுருகன் என்று பெயர் உண்டா என்றால் சக்தி மட்டும் தான். பி.வா.சா.ஆ.4 ஆவணத்தின் படி ரத்தினசபாபதி முத்துகுமரனுக்கு செட்டில்மெண்ட் எழுதிவைத்துள்ளார் என்றால் சரிதான். என் மகனுக்கு எழுதிக்கொடுத்த செட்டிமெண்ட் உண்மையான செட்டில்மெண்ட் என்றால் சரிதான். என்னிடம் காட்டபடும் பி.வா.சா.ஆ.4 ஆவணத்தில் எனக்கு பூர்வீக பாத்தியமான சொத்து என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் தற்போது கண் சரியாக தெரியவில்லை படிக்கமுடியவில்லை.

5. பி.வா.சா.ஆ.4 ஆவணத்தை நான் படித்து பார்க்கவில்லை என்றாலும் அதில் உள்ள வாசகங்கள் எனக்கு தெரியாது என்றாலும் சரிதான். பி.வா.சா.ஆ.4 ஆவணத்தில் ரத்தினசபாபதி கொடுத்த சொத்து அவருடைய பூர்வீக சொத்து என்றால் இல்லை, அவருடைய பாட்டி அபிராமிஅம்மாளின் சொத்து என சொல்லி தான் அந்த செட்டில்மெண்ட் எழுதப்பட்டது. பி.வா.சா.ஆ.4 அவணத்தில் அபிராமிஅம்மாளுக்கு பாத்தியம் என எழுதப்பட்டுள்ளதா என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. இந்த வழக்கு தாக்கல் செய்து பிறகு பி.வா.சா.ஆ.4 ஆவணம் எழுதப்பட்டது என்றால் இல்லை, வழக்கு தாக்கல் செய்வதற்கு ஒரு வாரத்திற்கு முன்பாக எழுதப்பட்டது . சுந்தரி என்பவர் வழக்கு தாக்கல் செய்வதை தெரிந்து கொண்டு தான் பி.வா.சா.ஆ.4 ஆவணம் எழுதப்பட்டது என்றால் அவர் வழக்கு தாக்கல் செய்வார் என்பது எனக்கு தெரியாது.

6. பி.வா.சா.ஆ.3 ஆவணத்தின் படி ரத்தினசபாபதி கணேசமூர்த்தி மைனராக இருக்கும்பொழுது எழுதிக்கொடுத்த செட்டில்மெண்ட் என்றால் அது பற்றி எனக்கு நேரடியாக தெரியாது. பி.வா.சா.ஆ.3 அவணம் எழுதப்பட்ட பின்பு தான் அதை பற்றி தெரிந்துகொண்டேன் என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.3 அசல் ஆவணம் எங்குள்ளது என்றால் அந்த ஆவணம் நீதிமன்றத்தில் தாக்கல் ஆகியுள்ளது. பி.வா.சா.ஆ.3 ஆவணம் எந்த சொத்திற்காக எழுதப்பட்டது என்றால் அபிராமிஅம்மாள் சொத்தும், ரத்தினசபாபதி சொத்திற்காகவும் எழுதப்பட்டுள்ளது. பாலசுப்பிரமணியம் எந்த தேதியில் பிறந்தார் என்றால் தெரியாது. பி.வா.சா.ஆ.1 இல் குறிப்பிடப்பட்டுள்ள அடமானம் அபிராமிஅம்மாளுக்கு பாத்தியப்பட்ட சொத்து என்றால் சரிதான். குமாரசாமி படையாச்சியும் அபிராமிஅம்மாளும் சேர்ந்து ஏற்படுத்தியது அந்த

அடமானம் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. அபிராமிஅம்மாள் பெயரில் மூல பத்திரம் உள்ளதா என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. 26.05.1909, 02.06.1926 ஆகிய ஆவணங்கள் பற்றி பி.வா.சா.ஆ.1 இல் குறிப்பிடப்பட்டுள்ள நிலையில் அந்த ஆவணங்கள் என் கைவசம் உள்ளதா என்றால் என் கணவரும், என் மாமனாரும் வழக்கறிஞரிடம் கொடுத்துள்ளார்கள்.

7. சரஸ்வதி அம்மாள் பாவாடை சாமிக்கு 30.10.1996 இல் கொடுத்த கிரயம் பற்றி எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. 30.10.1996 இல் ரவி என்பவருக்கு சரஸ்வதி அம்மாள் கிரயம் கொடுத்துள்ளாரா என்றால் எனக்கு தெரியாது. 17.07.2013 தேதியில் சரஸ்வதி அம்மாள் நியமதுனிஷாவிற்கு கிரயம் கொடுத்துள்ளார என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. என் கணவர் 25.03.1995 இல் ராஜாராமன் என்பவருக்கு வழக்கு சொத்து 25 ஐட்டத்தை கிரயம் கொடுத்துள்ளாரா என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. எனக்கு எப்போது திருமணம் நடந்தது என்றால் வைகாசி மாதம்,1992 இல் தேதி ஞாபகம் இல்லை. தற்போது கட்டியுள்ள வீடு வழக்கு சொத்தில் எந்த இன சொத்து என்றால் எனக்கு தெரியாது, பழைய புல எண்.74 தற்போதைய புல எண். தெரியாது. வழக்கு சொத்து 30 வது இனத்தில் என்னுடைய வீடு உள்ளதா அல்லது 31 வது இனத்தில் என்னுடைய வீடு உள்ளதா என்றால் எனக்கு தெரியாது.

8. தையல்நாயகியின் வீட்டின் புல எண். தெரியுமா என்றால் 3 எண் சேர்ந்தாற் போல் வரும் எந்த எண். என்று தெரியாது. நான் எந்த வருடம் வீடு கட்டினேன் என்றால் 2015 இல் மாடி வீடு கட்டினேன். தையல்நாயகி எந்த வருடம் வீடு கட்டினார் என்றால் சுமார் 2 வருடத்திற்கு முன்பு. இந்த வழக்கு தாக்கல் செய்யும் போது தையல்நாயகிக்கு குடிசை வீடு தான் இருந்தது என்றால் சரிதான்.

**சாட்சி விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.**

Typed to my dictation in open court read over to the witness and acknowledged by him/her to be correct.

*Sd/-S.Suganiya Sri,*
Additional District Munsif(FAC),
Chidambaram.